# PRESS NOTE

## SURPRISE CHECK BY DVAC AT THE REGIONAL ADMINISTRATIVE MEDICAL OFFICE (RAMO), JAMALIA, CHENNAI

Today 19.10.2022 upon receiving credible information, that the officials at the Office of the Regional Administrative Medical Officer (**RAMO**), Jamalia, Perambur High Road, Chennai-106, are collecting bribe from pharmaceutical companies on the occasion of Diwali festival, a joint surprise check with the DVAC officials and District inspection cell officer was conducted at the O/o The Regional Administrative Medical Officer, Chennai (ESI), Jamalia, Perambur High Road, Chennai-106. This office comes under the Directorate of Medical and Rural Health Services (ESI). The RAMO, Chennai, is in charge of 35 dispensaries in and around Chennai and the medical requirements for the dispensaries are received at this office and sent to the Director ESIC at DMS for approval.

The surprise check commenced at the said office at about 13.15 hrs and Dr.Thirunavaukarasu, MBBS, Ortho, was the Regional Administrative Medical Officer, Chennai. During the surprise check, Rs.6,00,000/- unaccounted cash was seized from the office bureau of the RAMO. One gold coin was seized from the office of the RAMO and 28 gold coins were seized from the car of one of the pharmaceutical company. Totally 29 gold coins (11 sovereigns) were seized. An unaccounted cash of Rs.63000/- was seized from the representatives of the pharmaceutical companies waiting to see the RAMO.

## பத்திரிக்கை செய்தி

## ஊழல் மற்றும் கண்காணிப்பு துறை அதிகாரிகளால் சென்னையிலுள்ள மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனை

சென்னை பெரம்பூர் நெடுஞ்சாலை ஜமாலியாவில் உள்ள மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மருத்துவ நிறுவன கம்பெனிதாரர்களிடம் கையூட்டாக பணம் பெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் இன்று 19.10.2022ம் தேதி சென்னை பெரம்பூர் நெடுஞ்சாலை, ஜமாலியாவில் உள்ள மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகத்தில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுக்குழு அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து திடீர் சோதனை நடத்தப்பட்டது. சென்னை மற்றும் சுற்றுவட்டாரங்களில் அமைந்துள்ள 35 மருந்தகங்கள், மண்டல நிர்வாக மருத்துவ அலுவலரின் கட்டுப்பட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. மேலும், மருந்தகங்களுக்கு தேவையான மருந்து வகைகளும் / மருத்துவ உபகரணங்களும் மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகத்திலிருந்தே வழங்கப்பட்டு ஒப்புதலுக்காக இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

மேற்படி அலுவலகத்தில் சுமார் 13.15 மணியளவில் டாக்டர்.திருநாவுக்கரசு, M.B.B.S., Ortho அவர்களது அலுவலக அறையிலிருந்த அலமாரியிலிருந்து கணக்கில் வராத ரொக்கம் ரூ.6,00,000/- மற்றும் 1 தங்க நாணயம் கைப்பற்றப்பட்டது மேலும் 28 தங்க நாணயங்கள் மருந்து நிறுவனத்திற்கு சொந்தமான காரிலிருந்து கைப்பற்றப்பட்டது. மொத்தம் 29 தங்க நாணயங்கள் (11 சவரன்) கைப்பற்றப்பட்டது. மேலும், அங்கிருந்த மருந்து கம்பெனிதாரர்களிடமிருந்து கணக்கில் வராத ரொக்கம் ரூ.63,000/- கைப்பற்றப்பட்டது.